R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
June 2022

வேல்டு இவான்சலிசம் பைபிள் ஸ்கூல்
7ம் ஆண்டு பட்டமளிப்பு விழா திருவல்லிக்கேணி சென்னை



"அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" மத்தேயு 9:37-38

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**

Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

love God
love people
be a servant



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 22 ஜூன் 2022 கனி 7




MONTHLY THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16




ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 30
தலைப்பு : புத்திமான் – Wise man
வேத வாசிப்பு : யோசுவா 1:1–9




1. தாவீது தன் செய்கையில் புத்திமானாக - 1சாமு.18:14-15,30
2. புத்தியுள்ள ஸ்திரீ - நீதி.14:1
3. புத்திமானுடைய மனம் - நீதி.15:14



இவர்களுடைய
ஊழியத்திற்காக ஜெபியுங்கள்


D.DAVID, Evangelist
CHURCH OF CHRIST
Keeraisathu -632 614
Ponnai (via)
VELLORE DT
Cell:97864 49601



**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்
**YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509




**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

திி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 262

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. மனுஷனுடைய இருதயத்திலுள்ள கவலை அதை ஒடுக்கும்; நல்வார்த்தையோ அதை என்னவாக்கும்?
2. கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே எப்படியிருக்கிறான்?
3. வருத்தத்தோடும் மனச்சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறையக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும், அமைச்சலோடு ஒரு கைப்பிடி நிறையைக் கொண்டிருப்பதே நலமா?
4. மகா பிரதான அப்போஸ்தலரிலும், நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்லவென்று எண்ணுகிறேன் என எழுதிய அப்போஸ்தலன் யார்?
5. கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை என்ன செய்வார்?
6. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை, நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் எப்படியிருக்கிறீர்கள்?
7. நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், எதற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்?
8. நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போல எப்படிப்பட்ட பிள்ளைகளாயிருந்தோம்?
9. நாங்கள் துரோகஞ்செய்து, கலகம்பண்ணினோம்; ஆகையால் தேவரீர் மன்னியாதிருந்தீர் என்று புலம்பும் தீர்க்கன் யார்?
10. பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி என எழுதின அப்போஸ்தலன் யார்?

## வேதாகம ஆய்வு... 47

ஒநேசிமு - Onesimus



1. பிரயோஜனமுள்ளவன் என்று அர்த்தம்
2. கொலோசெய சபையைச் சேர்ந்த பிலேமோனின் அடிமை
3. பவுலின் மன்றாட்டு – பிலே.10
4. உண்மையும் பிரியமுமுள்ள சகோதரன் – கொலோ.4:9
5. என்னை ஏற்றுக்கொள்வதுபோல அவனையும் ஏற்றுக்கொள்ளும் என்று பிலேமோனுக்கு பவுல் தன் சொந்தக்கையாலே எழுதிய கடிதம் – பிலே.17–18

சிறுவர் பகுதி



## கர்த்தரே தெய்வம் - The Lord Only God

-Sangeetha Ravi Asir

இஸ்ரவேல் என்னும் தேசத்தில் ஆகாப் என்னும் ராஜா இருந்தான். இவனுடைய மனைவியின் பெயர் யேசபேல் இந்த பெண் மிகவும் மோசமான பெண். எப்படியென்றால் இவள் இஸ்ரவேல் தேசத்திலே இருந்த தேவனுடைய ஜனங்களை தேவனுக்கு விரோதமான விக்கிர வழிபாடு அதாவது பாகால் என்னும் சிலையை வணங்கும்படி செய்தாள். அந்த நாட்களில் இருந்த தேவனுடைய ஊழியக்காரர்களை கொன்று போடுகிற மிகவும் சீர்கெட்ட மோசமான ஸ்திரீயாக இருந்தாள்.

இந்த நாட்களில் தான் தேவனுடைய ஊழியக்காரனாகிய எலியா என்பவரும் வாழ்ந்து வந்தார். இந்த எலியா என்பவரும் யேசபேலுக்கு பயந்து ஒழிந்து வாழ்ந்தார். தேவன் எலியாவை பாதுகாத்தார். தேவன் இந்த ஜனங்களுடைய பொல்லாப்பினிமித்தம் தேசத்திலே மூன்றரை ஆண்டுகள் மழையை கொடுக்கவில்லை பயிர்கள் எல்லாம் வாடிப்போனது தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டது. தேசத்திலே மிகவும் கொடிதான பஞ்சம் வந்தது. மூன்று வருஷம் சென்ற பின்பு கர்த்தர் எலியாவிடம் நீ போய் ஆகாப் ராஜாவை சந்தித்து தேசத்திலே தேவன் மழையை கட்டளையிடப்போகிறார் என்பதாக சொல்ல சொல்கிறார் எலியாவும் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஆகாப் ராஜாவை சந்தித்து தேவன் இந்த தேசத்திலே மழையை கட்டளையிடப்போகிறார் என்று சொல்லுகிறார் என்றார். ஆனால் ஆகாப் ராஜாவோ எலியாவைப் பார்த்து இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறாய் என்று குற்றப்படுத்தினான். அதற்கு எலியா நான் அல்ல. நீரும் உன் குடும்பத்தாருமே இஸ்ரவேல் ஜனங்களை கலங்கப்பண்ணுகிறீர்கள் என்று சொன்னார்.

பின்பு எலியா தேசத்து ஜனங்களைப் பார்த்து கர்த்தர் தெய்வம் என்றால் அவரை கர்த்தரைப் பின்பற்றுங்கள் பாகால் தெய்வம் என்றால் அவனைப் பின்பற்றுங்கள் என்று சொல்லி அவர்களுக்குள்ளே ஒரு பரீட்சை வைத்தார். எப்படியென்றால் பாகாலின் தீர்க்கதரிசிகளாகிய நானூற்று ஐம்பது பேரையும் கர்மேல் மலையிலே கூடிவரச் செய்து ஒரு பலிபீடம் கட்ட சொல்லி அதிலே விறகுகளை அடுக்கி ஒரு காளையை துண்டித்து வைத்து உங்கள் பாகாலை கூப்பிடுங்கள் பாகால் வந்து இவைகளை பட்சிக்கட்டும் என்று எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளிடம் சொன்னார். அதன்படியே அவர்களும் விறகுகளை அடுக்கி, காளையையும் துண்டித்துவைத்து, தங்களுடைய உடலில் கத்திகளாலும், ஈட்டிகளாலும் கீறிக்கொண்டு காலை முதல் அந்தி சாயுமட்டும் சத்தமிட்டு பாகாலைக் கூப்பிட்டார்கள். பாகால் வரவில்லை.

ஏன் பாகால் வரவில்லை? ஏனென்றால் பாகால் தேவனே இல்லை. தேவனுடைய மனுஷனாகிய எலியாவோ பலிபீடத்தை கட்டி விறகுகளை அடுக்கி, காளையையும் துண்டித்துவைத்து, தண்ணீரையும் ஊற்றி தேவனை நோக்கி ஒரே ஒரு விண்ணப்பத்தை வைத்தான் தேவன் கேட்டு அந்த பலிபீடத்தில் உள்ள விறகுகளையும், காளையையும், தண்ணீரையும் ஏன் கற்களையும், மண்ணையும் வானத்திலிருந்து அக்கினியை இறக்கி நக்கிப்போட்டது என்று பார்க்கிறோம். இதை கண்ட ஜனங்கள் கர்த்தரே தெய்வம் என்றார்கள். ஆம் குட்டீஸ் நம்முடைய தேவன் மெய்யான தேவன் என்பது இதன் மூலம் நிருபனமாகிறது.

**மனப்பாடவசனம்**

**"கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான்" - 1இராஜாக்கள் 18:21**



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 22 ஜூன் - 2022 கனி - 7

ஆசிரியருரை

## இயேசு சுயமாய்ப் பேசவில்லை

### Jesus Has Not Spoken of the Own Authority



இன்றைக்கு தங்களுடைய சொந்தக்கருத்துக்களை ஜனங்கள் மத்தியில் திணிக்கிறவர்களைப் பார்க்கிறோம். ஆனால் முழுஅதிகாரத்தையும் பெற்ற ஆண்டவர் இயேசு, தான் சுயமாய் ஒன்றும் பேசவில்லை என்கிறார். "நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்" (யோவா.12:49). ஒருவரிடம் ஒருகாரியத்தை சொன்னால் அந்த காரியத்தை அப்படியே மற்றவர்களிடம் சொல்லமாட்டார்கள் ஏதாவது சிலவற்றை கூட்டியோ அல்லது குறைத்தோ சொல்லுவார்கள். ஆனால் தேவனிடத்திலிருந்து வந்த இயேசுவானவர் பிதா என்ன சொன்னாரோ அதை அப்படியே ஜனங்களுக்கு உபதேசித்தார். அவர் சுயமாய் ஒரு காரியத்தையும் சொல்லவுமில்லை, செய்யவுமில்லை. பிதாவை எல்லாவகையிலும் இயேசுவானவர் கனப்படுத்தினார். மேலும் அவர் சொல்லும்போது; "என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்" என்றார் (யோவா.7:16,17).

ஆம், அன்பானவர்களே கிறிஸ்துவானவர் போதித்த உபதேசம் தேவனுடைய உபதேசமாக இருந்தது. அவர் சுயமாக ஒன்றும் பேசாமல் பிதாவானவரிடம் தான் பெற்றுக்கொண்டதையே பேசினார். ஆகையால் இந்த வசனத்தைக் கேட்டு அவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்கிறார். "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டுநீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவா.5:24). தேவனுடைய உபதேசம் எல்லோரையும் இரட்சிக்கும்படியான உபதேசம். ஒருவரும் கெட்டுப்போகாமல் மனந்திரும்பவேண்டுமென்று தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். ஆகையால் ஒருவன் அவருடைய வசனத்தை கேட்டு விசுவாசித்து மனந்திரும்பும்போது அவன் இரட்சிப்பின் வழியே வழிநடத்தப்படுகிறான். இதைக் கர்த்தர் சொல்லும்போது அவன் மரணத்தை விட்டு விலகி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே

சொல்லுகிறேன் என்கிறார். அவர் திரும்ப திரும்ப மெய்யாகவே, மெய்யாகவே என்று வலியுறுத்தி சொல்வதன் காரணம் என்னவென்றால்; அந்த ஆசீர்வாதம் அவர்களுக்கு உண்டு என்பதை அழுத்தமாக சொல்லுகிறார். இந்த நிலையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா? அப்படியானால் தொடர்ந்து தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுங்கள்.

சுயமாய்பேசுகிறவன் சுயமகிமையைத் தேடுகிறான் என வேதம் போதிக்கிறது. "சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை" என்கிறார் (யோவா.7:18). சுயமகிமை என்று பார்க்கும்போது; தன்னைக்குறித்து மற்றவர்கள் புகழவேண்டும், தன்னுடைய கருத்துக்களை மற்றவர்கள் ஏற்றுக்கொண்டு அதைப் பின்தொடரவேண்டும் என நினைக்கக்கூடியவர்கள் இருந்தபடியால் புதிய ஏற்பாட்டு சபையில் பிரிவு ஏற்பட்டது. தேவன் ஒருபோதும் பிரிவினையை ஏற்றுக்கொள்ளார். தன்னை அனுப்பினவரை உயர்த்தவேண்டும் என்று நினைக்கிறவன் அவருடைய மகிமையை தேடுகிறான் அவனிடத்தில் அநீதியில்லை என காண்கிறோம். இயேசுவானவர் பிதாவை மகிமைப்படுத்தினார். பிதாவினிடத்தில் சகலத்தையும் கேட்டு பெற்றுக்கொண்டார். அவர் தாம் சுயமாய் ஒன்றும் செய்யவில்லை. தன்னை தேவனுடைய சமுகத்தில் ஒப்புக்கொடுக்கும்போதுகூட பிதாவே என் ஆவியை உம்முடைய கரங்களில் ஒப்புக்கொடுக்கிறேன் என்று சொல்லி ஒப்புக்கொடுத்தார். அவர் ஒரே சபையை ஏற்படுத்தினார். அது பிதாவுக்கு மகிமையைக் கொண்டுவந்தது.

ஆனால் இயேசுவுக்குப்பின் அநேகர் தங்களுடைய சொந்தக்கருத்துக்களை ஜனங்களிடத்தில் சொல்லி சுயமகிமையை தேட ஆரம்பித்தனர். அவர்களில் ஒருவனாகிய தெயுதாஸ் என்பவனைக்குறித்து படிக்கிறோம். "தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள்" என அப்.5:36-ம் வசனத்தில் படிக்கிறோம். முதல் நூற்றாண்டில் இந்தவிதமான பிரிவினை வாதிகள் எழும்பி பிரிவினை மார்க்கங்களை உருவாக்கினர். அதில் ஒரு சிலர் சேர்ந்துகொண்டு அவர்கள் இருக்கும்வரை அந்த மார்க்கத்தை நம்பி மோசம்போனார்கள். இன்றைக்கும் இந்தவிதமான பிரிவினைவாதிகள் எழும்பி அநேகரை வஞ்சித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை நம்பி அநேகர் மனிதனுடைய உபதேசங்களுக்குச் செவிகொடுத்து ஏமாற்றப்பட்டுப்போய்க் கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய உபதேசத்தை மாற்றாமல் அப்படியே நமக்குக் கொடுத்தவர் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அந்த "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்" என்கிறார் (2யோவா.9,10). அநேகர் கிறிஸ்துவின் நாமத்தினாலே வீடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கும்படியாக கடந்துசெல்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை கொண்டுவருகிறார்களா என்பதை நாம் வசனத்தைக் கொண்டு ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். ஏனெனில் கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி



அக்கினியினால் கர்த்தர் அழிக்கப்போகிறார் என்று கர்த்தருடைய புருஷர்கள் கூறினபோதும் அதை நம்பாமல் பின்னிட்டுப் பார்த்து உப்புத் தூண் ஆனாள். தன் ஜீவனை இழந்தாள்.

அன்பு சகோதரிகளே, "இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது" (2பேது.3:7) என வேதம் கூறுகிறது. இன்றைய நாளில் வாழும் நமக்கு இது எச்சரிக்கையின் தொனி அல்லவா? "....சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும் அவர்களைப் போல விபசாரம்பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்" (யூதா.7). நாமோ லோத்தின் மனைவியைப் போல நம்முடைய ஜீவனையும் நமக்குண்டான உலக சம்பத்துக்களையும் காக்க நினைக்க வேண்டாம். உலகத்தில் சேர்த்து வைக்கப்பட்ட உங்கள் பொக்கிஷங்களை பூச்சியும் துருவும் கெடுத்து அழித்துப்போடும் ஆனால் உங்களுடையவைகளை கிறிஸ்துவினிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் செலவழிக்க பிரயாசப்படுங்கள். அப்படிச் செய்யும்போது அதை நித்தியத்தில் கண்டடைவோம் அல்லது உயிர்ப்பித்துக் கொள்ளுவோம் (லூக்.17:33; மத்.16:25). தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக் கொள்வான் (மாற்.8:35) என்றார்.

எனவே, லோத்தின் மனைவியைப் போல இல்லாதபடி நம் ஜீவன் தப்ப பாவ உலகத்தினின்று நம்மை விடுவித்துக் கொள்வோம். விட்டு வந்த நம்முடைய பழைய பாவ ஜீவியத்தையும், உலகத்தையும் பின்னிட்டு பாராதிருப்போம். வரப்போகிற அழிவிலிருந்து நாமும் நம்முடையவர்களும் காக்கப்பட கிறிஸ்துவினிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் நம்முடையவைகளை இழக்க விரும்புவோம். இங்கு நாம் இழப்பவைகளை நித்தியத்தில் உயிர்ப்பித்துக் கொள்வோம். "லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறின இயேசுவின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ தேவன் தாமே உதவி செய்வாராக! ஆமென்.

- நமது மாதஇதழின் புதிய வாசகர்களுக்காக தேவனுக்கு நன்றி சொல்லி...
- மாணவர்களுடைய படிப்பிற்காக...
- கொரோனா தொற்றிலிருந்து ஜனங்கள் முற்றிலும் காக்கப்பட...
- சபைகள் சத்தியத்தில் வளர்ந்து பெருக...
- தமிழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இரண்டு சபைக்காக...
- நமது வேதாகம பள்ளியில் சேர்ந்துள்ள புதிய மாணவர்களுக்காக...
- வேதாகம பயிற்சி முடித்து பட்டம் பெற்ற மாணவர்களுக்காக...



ஜெபியுங்கள்




மாத இதழுக்கான சந்தா செலுத்த இரு வழிகள்

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா.3:16). இதை விசுவாசிப்பவர்கள் யார்? சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருந்ததினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும் அப்பட்டணங்களை அழிக்க சித்தம் கொண்ட கர்த்தர் அழிவிலிருந்து இவர்களைக் காப்பாற்ற எண்ணி அவர்களின் கையைப் பிடித்து வெளியே கொண்டுவந்தார். இப்போதிருக்கிற இவ்வுலகில் பாவம் பெருகிக் கொண்டே இருக்கிறதல்லவா? எனவே பொல்லாங்கனுக்குள் இருக்கிற இவ்வுலகத்தை விட்டும், இவ்வுலகத்தின் செயல்பாடுகளை விட்டும் வெளியேறி நம்மைக் காத்துக் கொள்வோம். பட்டணத்திற்கு வெளியே கொண்டுவிடப்பட்ட லோதின் மனைவி அதன் பிறகு என்ன செய்தாள்?

"உன் ஜீவன் தப்ப ஓடிப்போ (ஆதி.19:17) என்றார். ஒரு வீடு தீப்பற்றிக் கொண்டது என வைத்துக் கொள்வோம். தீப்பற்றிக் கொண்ட வீட்டிற்குள்ளிருக்கும் அனைவரும் உடனே தங்களுடைய ஜீவன் தப்ப வெளியே ஓடி வரவேண்டும் அப்போது தான் பிழைத்துக் கொள்ள முடியும். இல்லை, இல்லை என்னுடைய ATM Card ஐ யாவது எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தீப்பற்றி எரிகிற வீட்டிற்குள் இருந்துகொண்டு தாமதிப்போமானால் வெந்து அழிந்து விடுவோம். அப்படித்தானே? இந்த லோத்தின் மனைவியும் அவ்வாறு இருந்து விடுவாளோ அவளுடைய ஜீவன் தப்ப வேண்டுமானால் தாமதிக்காமல் ஓடிப் போகவேண்டுமே என்று தேவதூதர்கள் அவர்களைத் துரிதப்படுத்தியிருக்கக் கூடும். "கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டுபோ என்று சொல்லி, அவனைத் துரிதப்படத்தினார்கள்" (ஆதி.19:15). லோத்தின் மனைவி செவிசாய்த்தாளா?

அதன் பின் இன்னொரு எச்சரிப்பின் சப்தமும் கொடுக்கப்பட்டது. அது என்னவென்றால், "பின்னிட்டுப்பாராதே (ஆதி.19:17) என்ற நிபந்தனை தான். ஆனால் "அவன் (லோத்தின்) மனைவியோ பின்னிட்டுப்பார்த்து உப்புத்தூண் ஆனாள்" (ஆதி.19:26). என்று வேதம் கூறுகிறது. எதற்காகப் பின்னிட்டுப் பார்த்திருப்பாள்? ஒருவேளை தன்னுடைய பூமிக்குரிய ஆஸ்திகளையும் தன் ஜீவனுக்குண்டான வேறே ஏதாவது பூமிக்குரிய தான் சேமித்த பொருட்களை நினைத்து, அவைகள் அழிந்து விடுமா அல்லது அழியாதா என பல காரியங்கள் அவளைப் பின்னிட்டுப் பார்க்கச்செய்திருக்கலாம். வேத ஆராய்ச்சியாளர் கூட 'லோத்தின் மனைவி பூமிக்குரிய தன்னுடைய பொக்கிஷங்களை நினைத்து அவள் பின்னிட்டுப் பார்த்திருப்பாள் என்கின்றனர். தொடர்ந்து இயேசு கூறுகையில் "தன் ஜீவனை இரட்சிக்க வகைதேடுகிறவன் அதை இழந்துபோவான்; இழந்து போகிறவன் அதை உயிர்ப்பித்துக்கொள்ளுவான்" (லூக்.17:33) என்றார். "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" (மாற்.டீ8:36; மத்.16:26). லோத்தின் மனைவி தன் ஜீவனை நஷ்டப்படுத்திக் கொண்டாள். 'உலகமும் அதின் ஆசை இச்சைகளும் ஒழிந்துபோம்'. சோதோம் கொமோரா பட்டணங்களை



கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வார்கள் என்று சொல்லப்பட்டபடி எழும்புவார்கள். அவர்களை அடையாளம் கண்டு கொண்டு அப்படிப்பட்டவர்களை உங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ளாமலும் அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள் என எச்சரிக்கப்படுகிறோம்.

தேவனுடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறது எனக் காண்கிறோம். ஆம், கர்த்தர் சொல்லும்போது; அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிற தென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்" (யோவா.12:50). ஏட்டு சுரக்காய் கரிக்காகுமா? என்று சொல்லப்படும் பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இங்கே அது நித்தியஜீவனாயிருக்கிறது என்கிறார். ஆம், விசுவாசிக்கிற நமக்கு அது நித்திய ஜீவனைக்கொடுக்கும். விசுவாசிக்கிறவர்கள் இந்த நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். விசுவாசியாதவர்களோ ஆக்கினைக்குள்ளாக தள்ளப்படுவார்கள். இதை விசுவாசியாத ஐசுவரியவான் பாதாளத்திலே வேதனைப்படுகிறபோது ஆபிரகாம் மடியிலே உட்கார்ந்திருந்த கொடிய தரித்திரமுடையவனாய் வாழ்ந்து மரித்த லாசருவை பார்த்தான். தேவனுடைய கட்டளையை ஏற்று விசுவாசிக்கிறவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதற்கு இச்சம்பவம் ஆதாரமாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசு பிதாவானவர் கொடுத்த கட்டளையை அப்படியே ஜனங்களுக்குப் போதித்தார். ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார். அந்த கட்டளையை நீங்கள் எவ்வாறு கைக்கொள்ளுகிறீர்கள், மற்றவர்களுக்கு அவைகளைக்குறித்து எவ்விதமாக போதிக்கிறீர்கள்? அது நித்திய ஜீவனை ஒருமனிதனுக்கு கொடுக்கக்கூடியது. ஆகையால் அவைகளை அப்படியே போதிக்கும்படியாக நாம் முயற்சிக்கவேண்டும். அதை மாற்றிப்போதிப்பதோ, அல்லது குறைத்துப்போதிப்பதோ கொடிய தண்டனையை நமக்கு ஏற்படுத்தும். ஆகையால் கர்த்தராகிய இயேசுவானவர் போதித்ததைப்போல தேவனுடைய வார்த்தைகளை மாற்றாமல் மற்றவர்களுக்கு போதிப்போம்.

மேலும், "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்கிறார் (யோவா.6:63). விதைக்கு எப்படி ஜீவன் இருக்கிறதோ, அதைப்போல வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. இதை ஒரு மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அவன் ஜீவனுள்ளமனிதனாகவும், ஆவிக்குரிய மனிதானாகவும் மாற்றப்படுகிறான். ஆனால் மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட மாம்சம் ஒன்றுக்கும் உதவாது என வேதம் போதிக்கிறது. ஆனால் இந்த மாம்சத்தை பேணுகிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதை அழகுபடுத்தும்படியாக ஒவ்வொருநாளும் அதற்காக எடுத்துக்கொள்ளும் நேரம் அதிகமாக இருக்கிறது. தங்களுடைய ஆத்துமாவைக்குறித்தும், நாம் மரித்தபின் என்ன செய்யப்போகிறோம்? என்பதைக்குறித்தும் சிந்திப்பவர்கள் மிக குறைவாகவே உள்ளனர். கர்த்தருடைய வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. இந்த வசனங்கள் ஒரு மனிதனை உயிர்ப்பிக்கும். ஆகையால் பேதுரு; இயேசுவை நோக்கி சொல்லும்போது; "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்" என்றான் (யோவா.6:68,69).

உங்களுடைய விசுவாசம் இப்படிப்பட்டதாக இருக்கிறதா? பேதுருவும் அவருடைய சீஷர்களும் கர்த்தரை நன்கு அறிந்தவர்களாயிருந்தனர். அவரிடத்தில் நித்திய ஜீவவசனங்கள் இருந்தது. உலகத்தில் பணமிருந்தால் அநேகர் ஒட்டிக்கொள்ளுவார்கள். ஏனென்றால், அவனிடத்தில் பணம் இருக்கிறது ஒன்றுக்கும் கவலையில்லை தேவைப்படும்போது உதவுவான் என்று சொல்லி அவனை ஒட்டிக்கொள்ளுவார்கள். ஆனால் இயேசுவிடம் பணமோ பொருளோ இல்லை. ஆனாலும் இயேசுவின் சீஷர்கள் அவரை ஒட்டிக்கொண்டிருந்தனர். காரணம் அவரிடத்தில் யாரிடமும் இல்லாத தேவனுடைய வசனம், ஜீவனுள்ள வசனம் இருந்தது. அது ஒவ்வொருவருக்கும் நித்திய ஜீவனைக்கொடுக்கும் வசனமாயிருந்தது. உலக சம்பத்துக்கள் உலகத்தோடு அழிந்துபோய்விடும். ஆனால் வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், கர்த்தருடைய வசனம் ஒருக்காலும் ஒழிந்துபோகாது என்ற அசையாத நம்பிக்கையுடையவர்களாக ஆண்டவருடைய சீஷர்கள் இருந்தார்கள். ஆகையாலே யாரிடத்திலே போவோம் நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்திலே உண்டே என்றார்கள். ஆம், அன்பான சகோதரனே, சகோதரியே இயேசுவிடம் தேவனுடைய மெய்யான உபதேசம் இருக்கிறது. ஆகையால் கிறிஸ்துவின் உபதேசத்திற்குச் செவிகொடுங்கள். அது உங்களுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கும். உலகத்திலே சுயமாய் ஏற்படுத்தப்பட்ட சுயகோட்பாடுகளைக் கொண்டுள்ள மார்க்கங்களை நம்பி மோசம்போய் விடாதிருக்க தேவனுடைய உன்னதமான உபதேசத்திற்குத் திரும்புங்கள். அந்த உபதேசம் பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து மனிதர்களால் பின்பற்றப் பட்டுக்கொண்டு வருகிறது. அதை ஏற்றுக்கொண்டவர்கள் ஆசீர்வதிக்கப் படுகிறார்கள். அவர்களுக்கு அசையாத நம்பிக்கையிருக்கிறது. அந்த குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்தவர்களா யிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களோடு நீங்களும் சேர்ந்துகொண்டு உங்களுடைய ஆவி ஆத்துமா இரட்சிக்கப்பட உங்களை கர்த்தருடைய வசனத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

**நான் ஏன் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு செவிகொடுக்கவேண்டும்?**

கிறிஸ்துவானவர் பூமிக்கு அப்பாற்பட்டவர், தேவனுடைய குமாரன், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர், ஆதியிலே தேவனோடிருந்தவர், சகலமும் அவர் மூலமாகவே உண்டானது. சகல தீர்க்கதரிசிகளும் பூமியிலிருந்து உண்டானவர்கள். யோவான்ஸ் நானகனுக்குப்பின்பு இறுதியாக தேவன் தம்முடைய குமாரனைத் தெரிந்து கொண்டார். ஆகையால் இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று திருவுளம்பற்றினார். ஆகையால் அவருக்குச் செவிகொடுக்கவேண்டும். மேலும், "உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந் துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார்" என யோவா.3;31,32 வசனங்களில் வாசிக்கிறோம். இப்படிப்பட்ட உன்னதமானவர் உன்னதத்திலிருந்து வந்திருக்கும்போது அவருடைய வசனங்களுக்கு நாம் செவிகொடுக்கவேண்டியது அவசியமல்லவா? அவர் பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தும்படியாக அவருடைய கட்டளைகளை அப்படியே நமக்கு கொடுத்தார். தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாக அறிவிக்கிறார். அவைகளை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



பெண்கள் பகுதி

## லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்

## Remember Lot`s Wife

*-Glory Arjunan*



கடைசி காலத்தில் இருக்கும் நமக்கு லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என நினைக்கிறேன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் "லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்" (லூக்.17:32) என்றார். மனுக்குலத்தை இரட்சித்து அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும்படி வந்த இயேசு கிறிஸ்து இவ்வாறு கூறுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். எனவே லோத்தின் மனைவியைப் பற்றி தெரிந்து கொள்ளுவோம்.

இவளுடைய பெயர் குறிப்பிடப்படவில்லை ஆனால் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமின் சகோதரனின் மகன் லோத் என்பவனின் மனைவி. இவர்கள் சோதோமில் தங்கள் பிள்ளைகளோடு வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் கர்த்தருடைய தூதர்கள் லோத்தினிடத்தில் வந்து, "நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப் போகிறோம்; இவர்கள் கூக்குரல் கர்த்தருடைய சமூகத்தில் பெரியதாயிருக்கிறது; இதை அழிக்கக் கர்த்தர் எங்களை அனுப்பினார் என்றார்கள்" (ஆதி.19:13). கர்த்தர் அந்த அழிவினின்று லோத்தையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்ற விரும்பினார் எனவே, "அவன் (லோத்) தாமதித்துக்கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவன் மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்த புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள். அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்த சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்" (ஆதி.19:16-17). கர்த்தருடைய இரக்கம் எவ்வளவு பெரிது! கர்த்தர் எப்போதும் தம்முடைய ஜனங்களைக் காப்பாற்ற விரும்புகிறார். அதன்பொருட்டு நம்முன் சில நிபந்தனைகளையும் வைக்கிறார். ஆனால், ஸ்திரீகளாகிய நமக்கோ கர்த்தரின் கட்டளைகளை மீறுவதே வழக்கமாகிவிட்டது. அன்று ஏவாள், புசிக்க வேண்டாம் என்று விலக்கின கனியைப் புசித்து கட்டளையை மீறி ஆன்மீக மரணத்துக்குக் காரணமானதைப்போல இன்றும் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாத செயல்கள் நம்மிடையே நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. லோத்தின் மனைவியும் அவ்வாறே செய்து தன் ஜீவனை இழந்தாள். அவள் எவ்வாறு தேவனுடைய இரக்கத்தை அள்ளத் தட்டினாள் எனப் பார்ப்போம்!

முதலாவது, தேவதூதர்கள் அவன் (லோத்) மேல் வைத்த இரக்கத்தினாலே... அவன் மனைவியின் கையையும் பிடித்து பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள் என வாசிக்கிறோம் (ஆதி.19;16). இன்றும் கர்த்தர் நம் ஒவ்வொருவர் மேலும் இரக்கமுடையவராக நம்மை வரவிருக்கும் அழிவுக்குத் தப்புவிக்க விரும்பி "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை

## பாடம்: 3 விசுவாசமும் விசுவாச வீரர்களும்

## Faith and Faith Knights - K.R.K.Ravi Asir

**- தொடர்ச்சி....**

கர்த்தர் யோபுவுடனே பேசும்பொழுது கேட்கிறார்; "நான் பூமியை அஸ்திபாரப் படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி. அதற்கு அளவு குறித்தவர் யார்? அதின்மேல் நூல் போட்டவர் யார்? இதை நீ அறிந்திருந்தால் சொல்லு" (யோபு 38:45) என்றும் மேலும், யோபு 38,39 அதிகாரங்களை முழுமையாக வாசித்துப்பாருங்கள். நீங்கள் தேவனுடைய வல்லமையை உணர்ந்துகொள்ள முடியும். மேலும் கர்த்தராகிய தேவனுடைய சிருஷ்டிப்பாகிய லிவியாதான் என்னும் மிருகத்தைக் குறித்து யோபு 41ம் அதிகாரத்தில் வாசித்துப்பாருங்கள். இன்னும் பிகெமோத்தை குறித்து யோபு 40:15-24 வசனங்களிலும், லிவியாதானை குறித்து யோபு 41-ம் அதிகாரத்திலும் வாசித்துப்பாருங்கள். மேலும், தேவனுக்கென்றே சில விசேஷமான தன்மைகள் இருக்கின்றன. அவைகள்தான் நித்தியவல்லமை, தேவத்துவம் என்னும் தன்மைகள்.

மேலும் 2 கொரி. 4:17,18 வசனங்களில், "மேலும் காணப்படுகிறவை களையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" என்று நாம் வாசிக்கிறோம். எனவே, காணப்படாதவராகிய தேவனையும், அவருடைய ஒரே பேறான குமாரனாயிருக்கிற இயேசு கிறிஸ்துவையும் நாம் விசுவாசிக்கிறோமா? ஏனென்றால், "விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" என்று யோவான் 11:40ல் உரைக்கப்பட்டிருககிறதை நாம் காண்கிறோம். "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" (சங். 19:1).

**தெரிந்து கொள்ளுவோம்**

### இமய மலை

✦ பூமியிலேயே நீளமானதும், உயரமானதுமான மலைத் தொடர் ஆகும்.

✦ இம்மலையின் கம்பீரமான மணிமுடியாக எவரெஸ்ட் சிகரம் அமைந்துள்ளது.


✦ மேற்கிலிருந்து கிழக்காக 2ஆயிரத்து 400 கிலோ மீட்டர்களுக்கு இம்மலைத் தொடர் நீள்கிறது.

*- K.R.K.Ravi Asir*



## வேசித்தனம் – Fornication

*-J.C.Choate*



**-சென்றமாத இதழின் தொடர்ச்சி**

அதன் பொருள் அவர்கள் பரலோகத்திற்குச் செல்லமுடியாது! "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலா.5:19-21). கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கும் இதேவிதமாக "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (1கொரி.6:9,10) என்ற கூற்றினையே எடுத்துரைத்தார்.

பவுல் எபேசுப்பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு, "மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய், உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது" (எபே.5:3) என்று எழுதினார். அதன்பின்பு கொலோசெயப்பட்டணத்தாருக்கு, அவன் "ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். இவைகளின்பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும்" (கொலோ.3:5,6) என்று அறிவுறுத்தினார். தெசலோனிக்கேய கிறிஸ்தவர்களுக்கு எழுதின நிருபத்தில், பவுல், "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து" (1தெச.4:3) என்று எழுதியுள்ளார். எனவே நாம் தேவனுடைய வார்த்தை வேசித்தனத்தைக் கடுமையாகக் கண்டிக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. நாம் இதைவிட்டு விலகி ஓடவேண்டுமென்றும், நாம் கட்டாயமாக இதை நம்மைவிட்டு அகற்றவேண்டுமென்றும், நமக்குள்ளாக ஒருபோதும் இவை சொல்லப்படவும் கூடாது என்றும், நாம் இந்தக் குற்றத்தை உடையவர்களாக ஒருபோதும் இருக்கக்கூடாது என்றும், நாம் விபசாரர்களோடு கலந்திருக்கக் கூடாதென்றும்,

இப்படிப்பட்ட பாவத்தைச் செய்கிறவர்கள் கர்த்தருடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்றும் தேவனுடைய வார்த்தை நம்மை எச்சரிக்கிறது.

விபசாரம் திருமணபந்தங்களை அழித்து அதன் பலனான வேறு பல விளைவுகளையும் கூட பாவத்தின் தீங்கு தானே ஏற்படுத்துகிறது (மத்.19:). வேசித்தனமானது சரீரத்திற்கு விரோதமான பாவமாகயிருக்கிறது, அதுவே சிற்றின்பத்தினால் உண்டாகும் வியாதிகளுக்குக் காரணமாயிருக்கிறது மட்டுமல்லாமல், நவீன கால மருந்துகளால் குணமாக்க முடியாதவைகளாகவும் இருக்கின்றன. இப்படிப்பட்ட ஒழுக்கக்கேடான நடத்தையின் பலன் மற்றவர்களுக்குள்ளும் வியாதிகளைக் கடத்தக்கூடியதாக இருக்கிறது. அவைகள் தவறான முறையில் குழந்தைகளைக் கர்ப்பந்தரிக்கவும் அதன் காரணமாக பார்வையற்ற அங்ககீனமான மற்றும் வேறு சில பக்க விளைவுகளையும் உண்டாக்கக் கூடிய நிலைமையை உண்டாக்குகின்றன. விபசாரத்தின் விளைவினால் எல்லா குழந்தைகளும் குருடராக அல்லது அங்ககீனமாகப் பிறக்கின்றன என்பது அதன் அர்த்தமல்ல, ஆனால் விபசாரம் செய்ய விரைந்தோடுகிற ஒவ்வொருவரும் தங்களது பாவமிகுந்த வாழ்க்கை முறையினால் பிறக்கும் குழந்தைகளுக்கு சரிசெய்ய முடியாத சீர்குலைவை ஏற்படுத்தும் காரணி ஆகின்றனர். பின்பு இவ்வகையான ஜீவியத்திற்குத் துணைபோகின்ற மனதை உருக்குலைக்கின்ற எல்லா உணர்ச்சிகளும், பெற்றோர்களின் இருதயங்களை சொல்லொண்ணா வகையில் உடைக்கின்றதாகவும், திருமணங்களையும், கண்ணியத்தையும், நற்பெயரையும் அழிக்கின்றதாக இருக்கின்றன.

பொதுவாக சமுதாயம் எப்போதும் ஒழுக்கக்கேடான செயலில் ஈடுபட்ட சிறுவனையோ அல்லது வாலிபனையோ சற்று கண்டும் காணாமல் விட்டுவிடுகின்றது ஆனால் இப்படிப்பட்ட பாவத்தில் ஆர்வம்காட்டுகின்ற பெண்களையோ பிடித்து காரணம் கேட்கின்ற மனோபாவத்தில் இருக்கின்றது. உண்மையாகவே, இருபாலரும் குற்றவாளிகள் தான். ஆனால் இதனால் ஒருவரும் காயப்படுத்தப்படவில்லையென்றால் இது என்ன பெரிய விஷயமா? என்ற எண்ணம் மேலோங்கியுள்ளது. ஆனால் யாரோ ஒருவர் எப்போதும் காயப்படுத்தப்படுகிறார். சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரியரீதியிலும், குடும்ப அங்கத்தினர்களாகவும் கூட மேலும், தங்களுடைய மற்ற கூட்டாளிகள் மத்தியிலும் இருதிரத்தாரும் காயப்படுத்தப்படுகின்றனர்.

நாம் அறிந்திருக்கிறபடி கிறிஸ்துவும் வேதாகமமும் பரிசுத்த வாழ்வை ஆதரித்துப் பேசுகின்றனர். ஒழுக்கக்கேடான வாழ்க்கை கண்டிக்கப்படுகிறது. கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் சில விசுவாசிகள் கூட இந்தவிதமான ஒழுக்கங்கெட்ட வாழ்க்கை முறையில் தங்களை ஈடுபடுத்தி செயல்படுவார்களானால், அவர்கள் மரண ஆக்கினைக்குட்பட்டவர்களாக தேவனுக்கு முன் நிற்பார்கள். அப்பேர்பட்டவர்கள் கட்டாயம் மனந்திரும்பவேண்டும் இல்லையென்றால் அழிக்கப்படுவார்கள்.

ஆனால் வேசித்தனத்திற்குத் தீர்வு என்ன? நாம் அதை மிகக்கொடூரமான பாவமாகக் கருதி, நாம் ஒருபோதும் அந்தப் பாவத்திற்குக் கவர்ந்திழுக்கப்படும்



ஒவ்வொன்றிற்காக வார்த்தைகளில் நன்றி கூறுதலோடு அடுத்த விண்ணப்பங்களை முன்வைப்போமானால் நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்துவதில் அது எப்பேர்பட்ட ஔஷதமாயிருக்கும்!

முந்தையநாட்களில் உதவினதும் பராமரித்ததுமான உண்மையான ஒவ்வொன்றையும் நன்றிகூறுதலில் பட்டியலிடுவோமென்றால், நம்மை பாதுகாக்கின்ற தேவனில் மகா பெரிதான விசுவாசத்தையும், தேவையான வழிநடத்துதலையும் அவர் கொடுப்பார் என மகா பெரிதான நம்பிக்கையையும், அவருடைய அநாதி அன்பின் மேல் பெரியதான உறுதியையும் பெற்றிருக்க மாட்டோமா?

அவ்வாறே நேற்று அன்புகூர்ந்து, நமக்கு செவிகொடுத்த தேவன் இன்றும் கூட நேசித்து நமக்குச் செவிகொடுப்பார் என்ற மிகுந்த உறுதியோடு மகாபெரிய விசுவாசத்தில் நாம் ஜெபிப்போம். நாம் 1யோவா.5:14,15-ல் யோவான் வெளிப்படுத்தியதை அறிந்து கொள்வோம். ‘‘நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக்கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். யோவான் ஜெபித்தபோதே ஏற்கனவே தன்னுடைய கையில் பதிலை அவன் பெற்றிருந்தது போல அவனுடைய நம்பிக்கை மிகப் பெரியதாயிருந்தது. ‘‘நாம் பெற்றுக்கொண்டோமென்று நாம் அறிந்திருக்கிறோம்....’’ முந்தைய பதில்களுக்கு நன்றியுள்ளவர்களாயிருத்தல், அதே நம்பிக்கையுடன் கூட ஜெபிப்பதற்கு நம்மை பெலப்படுத்துகிறது. வருத்தம் என்னவென்றால், கிறிஸ்தவர்களுடைய பல நல்ல ஜெபங்களுக்குப் பதில் ‘இல்லை’ என்பதேயாகும். ‘இல்லை’ என்ற அந்த பதில் தங்களுக்கு தங்களால் கொடுக்கப்பட்டது, ஏனென்றால் அவர்கள் ஒருபோதும் பதிலளிக்க தேவனுக்கு வாய்ப்பளிக்கவில்லை.

அது எவ்வாறு இருந்தது? யாக்கோபு1:5-7-ல் கூறுகிறார் ‘‘உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்: சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக’’.

தேவன் கேட்பாரோ என்ற சந்தேகம், மிகுதியான ஜெபத்தை வீணாக்கியிருக்கிறது. சந்தேகத்தை முறியடிப்பதற்கு நாம் கொண்டிருக்கிற ஒரு ஆயுதமானது, நமது வாழ்க்கையை திரும்பிப்பார்த்து தேவனுடைய முந்தைய நாளின் பராமரிப்பையும் ஜெபங்களுக்கான பதில்களையும் எண்ணிப்பார்ப்பதுமே ஆகும். நாம் நிறுத்தி நிதானித்து அதன்பின் நமது குற்றங்களை வார்த்தையினால் அறிக்கையிட்டு நமது வாழ்வில் நடந்த அனைத்து நிகழ்ச்சிகளும் உண்மையாகவே தேவனுடைய செயல் (யதார்த்தமாக நிகழும் அல்லது நடைபெறும் ஒன்று அல்ல) என்றும், அவருக்கு நன்றி செலுத்துவதன் மூலம் அவருடைய கவனமுள்ள பராமரிப்புக்கு நாம் காணிக்கை செலுத்துகையில் அச்செயலே அவர் இன்னும் செவிகொடுக்கிறார் என்றும், நமக்கு உதவும்படி காத்திருப்பார் என்றும் எண்ணும்படி நம்முடைய விசுவாசத்தைப் பெலப்படுத்துகிறது.

எனவே நன்றியுடனிருப்பது போதுமான விசுவாசத்தைப் பெற்றிருப்பதற்கு நம்மை பெலப்படுத்துகிறது. மறுபுறம் நம்முடைய வாழ்வில் நமது நன்மைக்கென்று செயல்பட தேவனை தடையின்றி அனுமதிக்கவும் செய்கிறது. அவருடைய உதவிக்காகவும், அவருடைய சுயவிருப்பங்கள் நமக்கு உதவும்படிக்கு எல்லாவற்றையும் சாதகமாக்கவும் அவருடைய கட்டளைகள் நமது வாஞ்சைகளை எவ்வளவு அழகாய் இணைக்கின்றது!

பெண்கள் பகுதி



# நன்றியுள்ளவளாயிரு
## Be Ye Thankful

*-Betty*

ஒருவரும் நன்றியற்ற தன்மையை புகழ்வதில்லை. வேதவாக்கியங்களும், தேவனும் கூட நாம் நன்றியுள்ள மக்களாக இருக்க தேவன் விரும்புகிறார் என சுட்டிக்காட்டுகிறது. உண்மையில் அவர் நமக்கு செய்திருக்கிற எல்லாவற்றிற்காகவும் நமது நன்றியினை அவரிடம் வெளிப்படுத்த நமக்குக் கட்டளையிடுகிறார். சில வசனங்களை நாம் வாசிப்போம்.

“தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு, இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது” (2கொரி.4:15).

“இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர், தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்” (2கொரி.9:12).

“நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்” (பிலி.4:6).

2கொரி.4:15 தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும் எனக் கூறுகிறது. எவ்வாறு நன்றியறிதலானது தேவனுடைய கிருபையின் பெருக்கத்தோடு இணைக்கப்பட்டுள்ளது?

2கொரி.9:12 தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே பரிசுத்தவான்களின் குறைவுகளை நீக்குவதற்கு சம்பூரண பலனுள்ளதாக இருக்கிறது எனக் கூறுகிறது.

பிலிப்பியர்6:4 தேவனிடத்திற்கு தெரியப்படுத்துகிற நமது ஜெபங்களுக்கும் விண்ணப்பங்களுக்குமிடையே இருக்கிறது ஸ்தோத்திரம் எனக்கூறுகிறது.

தேவன் மிகக் குறிப்பாக ஸ்தோத்திரம் செய்தலை ஏன் ஊக்கப்படுத்துகிறார்? மேலும் அந்த செயல்பாடானது எவ்வாறாக அவர் நம்மிடம் காண்பிக்கிற கிருபையின் பெருக்கத்தை உண்டாக்குகிறது?

நமது இதயம் கெட்ட குழந்தைகளைப் போல தேவன் ஏற்கனவே செய்து முடித்திருக்கிறவற்றிற்கு ஒரு போதும் நன்றி கூறாமல் மேலும் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தால் நாம் தேவனைப் பிரியப்படுத்தமுடியாது. ஆனால் உமக்கு நன்றி என்று கூறுவதற்கு மேலாக தேவன் பன்மடங்கு அதிகமாக செயல்படுகிறார் என நான் நினைக்கிறேன்.

எத்தனை முறை சிலவற்றிற்காக நாம் ஜெபித்து அதைப் பெற்றுக்கொண்டு அதன் பின் முதல் ஜெபத்திற்கு பதில் கிடைக்கப்பெற்றதை நாம் மறந்து மீண்டும் வேறொரு காரியத்திற்காக ஜெபிப்பதில் ஆர்வமுள்ளவர்களாய் இருந்திருக்கிறோம். நீங்கள் சாலைப் பிரயாணப் பாதுகாப்பிற்காக பிரயாணத்தை ஜெபத்துடன் ஆரம்பித்து அதன்பின் உங்களுடைய உரிய இடத்தை நீங்கள் அடைந்தபோது பாதுகாப்பாக நீங்கள் போய் சேர்ந்து விட்டீர்கள் என்பதை நினைப்பதற்கு எப்போதாவது தவறியிருக்கிறீர்களா? அடிக்கடி நாம் ஒரு தேவைக்காக ஜெபித்துவிட்டு, மற்றொன்றிற்குக் கடந்து செல்கின்றோமே தவிர, பதிலளிக்கப்பட்ட ஜெபத்தை எண்ணிப்பார்க்காமல் தொடர்ந்து கேட்டு, கேட்டு தேவன் நமது ஜெபங்களை எப்போதும் கேட்டுக்கொண்டேயிருக்கிறார் என்பது பற்றி நாம் நமக்குள்ளே சந்தேகம் கொள்கிறோம்.

நாம் நிறுத்தி நிதானமாக விண்ணப்பித்துள்ள குறிப்பிட்ட விண்ணப்பங்களில், நாம் பெற்றுள்ள குறிப்பிட்ட பதில்களை எண்ணிப்பார்த்து அதன்பின் கிடைத்த பதில்கள்



எண்ணத்தை நினைத்துக் கூடப் பார்க்கக்கூடாது. "ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும் அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும்" (1கொரி.7:2) என்று பவுல் சொல்லுகிறதைக் கவனியுங்கள். ஒரு மனுஷன் அல்லது மனுஷி திருமணமாகாதவர்களாக இருப்பார்களென்றால், அவர்கள் தங்களுடைய பாலுறவு சம்பந்தப்பட்ட ஆசைகளைக் கண்டிப்பாக கட்டுப்படுத்த வேண்டும் - மற்றவர்களை இச்சையோடு கூட பார்க்கக்கூடாது. நம்மைச் சுற்றிலும் பல தீமையான காரியங்கள் சூழ்ந்திருக்கின்றது என்பது உண்மை ஆனால் நாம் சோதனைக்குள் விழுந்துவிடாதிருக்க வேண்டும். ஒரு நல்ல மாதிரியை உருவாக்குவதன் மூலமும் நமக்குத் தெரிந்தவர்களுக்குக் கூடுமானால் தேவனுடைய சித்தத்தைப் போதிப்பதின் மூலமும் நாம் வாழும் இவ்வுலகை ஒரு சிறந்த உலகமாக மாற்றும்படிக்கு நாம் உதவி செய்வோம்.

## வாசகரின் தீர்மானம்...



இயேசுவின் இனிய நாமத்தில் ஆசிரியர் அவர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

ஏப்ரல் -22 ம் இதழில் கடைசி அட்டைப் படம், தாங்கள் உணவு வழங்கும் திட்டம் என் மனதை மிகவும் நெகிழச் செய்தது. என் எஜமானவர் இயேசுவுக்காக தாங்கள் செய்யும் இந்த மேலான ஊழியத்தில் என்னையும் இணைத்துக்கொள்ளுங்கள். என்னால் முடிந்த பண உதவி செய்ய தாங்கள் அனுமதி தரவேண்டும். இது என்னால் உண்டானது அல்ல இயேசுவால் உண்டான காரியம். நாம் பயன்பட இயேசு கிருபை செய்வாராக!

– மாணிக்கவாசகம், திருச்சி.

## நடப்புச் செய்திகள்

- உலகத்திலேயே மிக பெரிய அழகான பூ ‘ரபிளீசியா ஆர்னொல்டா’
- தமிழகத்தில் எண்ணெய் எரிவாயு எடுக்க அனுமதி கேட்கும் வேதாந்தா நிறுவனம்

## நான் யார்? – Who Am I?

- நான் மூத்தவன் ரோம அங்கிபோர்த்தவன்
- நான் வேட்டையில் வல்லவன்
- என் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்டேன்
- நான் தேவனால் வெறுக்கப்பட்டேன்
- எனக்கு மற்றொரு பெயர் ஏதோம்
- இஸ்மவேலிலே விவாகம்பண்ணினேன்
- எனது தம்பி யாக்கோபு



**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



**தற்சோதனை பகுதி - 45**

**45. பாவத்தின் சம்பளம் என்ன?**

1. பாவத்தின் சம்பளம் மரணம் ☐ வசன ஆதாரம் ------------------
2. இந்த மரண சரீரத்தினின்று யாரும் என்ன விடுதலையாக்க முடியாது ☐ வசன ஆதாரம்----------------------------------------
3. பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது ☐ வசன ஆதாரம்----------------------------
4. எனவே நியாயப்பிரமாணம் பாவம் ☐ வசன ஆதாரம் ---------
5. பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று என்னை வஞ்சித்தது ☐ வசன ஆதாரம்----------------------------------------------------
6. ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமில்லாதது ☐ வசன ஆதாரம்-
7. நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது ☐ வசன ஆதாரம்--------
8. அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னை சிறையாக்க முடியாது ☐ வசன ஆதாரம்-------------------
9. கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் பரிசுத்தமாயிருக்கும் ☐ வசன ஆதாரம்----------------------------
10. ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கவில்லை ☐ வசன ஆதாரம்----------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




மூப்பர்களுடனேகூட குறிப்பிடப்பட்டார்கள் (பிலி.1:1; 1தீமோ.3:1-3). ஆனால் எருசலேமில் மாத்திரம் அப்போஸ்தலர்கள் வெளியரங்கமாக மூப்பர்களாக பணியாற்றினார்கள். (2) உதவிக்காரர்கள் மூப்பர்களுக்கு உதவியாளர்களாயிருந்தபடியால் ஒரு சபையிலே உதவி செய்யும்படியாக மூப்பர்களும் இல்லையென்றால் ஒரு உதவியாளர் இருப்பதென்பது சாத்தியமில்லாத காரியமாய் இருக்கிறது. (3) எங்கே மூப்பர்கள் இல்லையோ அங்கே உதவிக்காரர்கள் தவறாக நியமிக்கப்படுவார்களேயாகில் அவர்கள் சபையை ஆள முயற்சிப்பதில் விருப்பம் கொண்டு மூப்பர்களுடைய ஸ்தானத்தை அபகரிப்பார்கள். இந்த காரணங்களுக்காகவே, மூப்பர்கள் எங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்களோ அங்கே உதவிக்காரர்கள் பணியாற்றலாம். ஆனால் மூப்பர்களை பொறுத்தவரையில் உதவிக்காரர்கள் அங்கே இன்னும் தகுதி அடையாவிட்டாலும், மூப்பர்களுடைய பணி உதவிக்காரர்களுக்கு கீழே வரவில்லை என்பதினாலே மூப்பர்கள் அங்கே பணியாற்றலாம். (அப். 14;23).

**கேள்விகள்**

1. உதவிக்காரர்களுக்கென்று ஒரு அலுவல் இருக்கிறதா? ____________________
2. அப். 6ம் அதிகாரத்தில் மனுஷர்கள் உதவிக்காரர்களாக தெரிந்தெடுக்கப் பட்டார்களா? ____________________
3. உதவிக்காரர்களுடைய வேலை ____________________ அல்ல; ஆனால் ____________________ இருக்கிறது.
4. ஒரு சபையின் உதவிக்காரர் என்று நாம் எப்பொழுதாகிலும் வாசிக்கிறோமா? ____________________
5. வேதாகமத்திலிருந்து 2 உதவிக்காரர்களின் பெயரைக் குறிப்பிடவும் ________________, ________________
6. மூப்பர்களைப் போன்று கிறிஸ்துவைப் போன்று உதவிக்காரர்கள் வழிநடத்தக் கூடியவர்களாயிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் ____________________
7. முதல் உதவிக்காரர்கள் எந்த நான்கு காரியங்களில் நிறைவானவர் களாயிருந்தார்கள் ____________________
8. ஒரு உதவிக்காரனுடைய மனைவியின் 4 தகுதிகளை குறிப்பிடவும்.
9. ஒரு சபையானது மூப்பர்களில்லாமல், உதவிக்காரர்களை உடைய தாயிருக்கலாமா? ____________________
10. உதவிக்காரர்களை குறித்து பேசும் 3 வசனக்குறிப்புகளை வரிசைப்படுத்தவும்.________, ________, ________

பெயரும், மதிப்பும் பெற்றதாயிருந்தது. பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்களாக ஒரு பரிசுத்த ஜீவியத்திலே ஆவியின் கனிகள் நிறைந்தவர்களாக காணப்பட்டார்கள். அவர்களுடைய "ஞானம்" நடைமுறையில் நற்பண்பு வாய்ந்ததாகவும், அவர்களுடைய பணியிலே ஜாக்கிரதையுடன் கூடிய நியாயமும் இருந்தது. "விசுவாசமும் வல்லமையும் நிறைந்தவர்களாயிருந்ததினாலே தேவனிடத்தில் பலமான நம்பிக்கையும், பற்றுதலும் கொண்டவர்களாயிருந்தார்கள். இந்த விசுவாசமானது அவர்களை வல்லமையும், செல்வாக்கும் மிகுந்த மனுஷராக்கியது, அங்கேதான் ஒரு உதவிக்காரரானவர் அவசியம். "தைரியமான" அல்லது "சிரத்தையுள்ள" மற்றும் "விவேகமுள்ளவராக" இருக்க வேண்டியது அவசியம் என்பதை அறிந்துகொள்கிறோம். அவன் "இருநாக்குள்ளவனாக" அல்லது "இருமுகம் கொண்டவனாக, சத்தியத்தை மட்டும் பேசுவதற்குப் பதிலாக வித்தியாசமான காரியங்களை பேசுகிறவனாக" இருக்கக்கூடாது. "மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல்" என்பது மதுபானப்பிரியம் கொண்டவனாக அல்லது பொருளாசை கொண்டவனாக மூப்பர்கள் என்ற தலைப்பின் கீழ் சம்பாஷிக்கிற விதமாக இருக்கக்கூடாது. "விசுவாசத்தின் இரகசியத்தை சுத்தமனச்சாட்சியினால் காத்துக் கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும்" என்பது நன்மையும், மாசற்றதுமான ஜீவியத்துடனேகூட சுவிசேஷம் போதிப்பதும் ஒன்று சேர்ந்து ஒருவரை தெளிவான மனச்சாட்சியுடையவராயிருக்கும்படி செய்கிறது. மூப்பர்கள் முன்னதாக மூப்பர்களைப்போன்று "சோதிக்கப் பட்டவர்களாகவும், குற்றஞ்சாட்டப்படாதவர்களாயும்" இருக்க வேண்டும்.

மேலும் மூப்பர்களைப் போன்று இவர்களும் "ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும், சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும்" அவர்களுடைய மனைவிகளும் தைரியமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர் களுமாயிருக்க வேண்டும். நன்மையும், உண்மையுமான கிறிஸ்தவ ஸ்திரீகள் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கு மனைவிகளாயிருக்க வேண்டியதின் முக்கியத்துவத்தை இது வெளிப்படுத்துகிறது. அவர்கள் ஜாக்கிரதையில்லாதவர்களாக, அவதூறுபண்ணுகிறவர்களாக இருக்கக் கூடாது. அவர்கள் சிந்திக்கிறவர்களாயும், உண்மையுள்ளவர்களாயும் இருக்க தங்களுடைய பாகத்தில் தங்களுடைய புருஷர்களை உற்சாகப்படுத்தவும், அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டியதும் மிக அவசியம். ஒரு மனுஷன் இவ்விதமான வழிகளிலே தன்னை ஒரு ஆவிக்குரிய முன்மாதிரியாக வெளிப்படுத்துவானேயாகில் பிராந்திய சபையில் ஒரு உதவிக்காரனாக இருக்க அவன் தகுதி வாய்ந்தவனாக இருக்கிறான்.

ஒரு பிராந்திய சபையிலே மூப்பர்கள் இல்லையெனில், மூப்பர்கள் நியமிக்கப்படலாமா? என்ற கேள்வி கேட்கப்படலாம். பின்வரும் காரணங்களுக்காக பதில் "இல்லை" என்பதாக இருககிறது. (1) அதற்கான வேதாகம உதாரணம் இல்லை. இதற்கு பதிலாக எப்பொழுதுமே மூப்பர்கள் முதலாவதாக நியமிக்கப்பட்டனர் (அப். 14:23). இன்னும் உதவிக்காரர்கள் எப்பொழுதுமே



# கிறிஸ்துவின் சபை

## Church of Christ





**1. இதன் தோற்றம்**

| | |
|---|---|
| 1. இயேசுவால் கட்டப்பட்டது | – மத்.16:18 |
| 2. எருசலேமில் துவங்கப்பட்டது | – லூக்.24:47 |
| 3. கிறிஸ்து ஒருவரே இதன் தலைவர் | – எபே.5:23 |

**2. இதன் நாமம்**

| | |
|---|---|
| 1. கிறிஸ்துவின் சபை | – ரோம.16:16 |
| 2. அவராலேயன்றி இரட்சிப்பு இல்லை | – அப்.4:12 |

**3. இதன் ஆராதனை**

| | |
|---|---|
| 1. பாடல் | – எபே.5:19 |
| 2. ஜெபம் | – 1தீமோ.2:8 |
| 3. பிரசங்கம் | – 1பேது.4:11 |
| 4. கொடுத்தல் (மனவிருப்பத்தின்படி) | – 2கொ.9:6–7 |
| 5. கர்த்தருடைய பந்தி | – அப்.20:7 |

**4. இதன் அங்கத்தினராக ஆவது எப்படி? (ஒரு கிறிஸ்தவன் மட்டும் அப்.11:26)**

| | |
|---|---|
| 1. சுவிசேஷத்தைக் கேள்விப்படு | – அப்.15:7 |
| 2. விசுவாசி | – எபி.11:6 |
| 3. மனந்திரும்பு | – லூக்.13:3 |
| 4. கிறிஸ்துவை அறிக்கையிடு | – மத்.10:32 |
| 5. ஞானஸ்நானம் பெறு | – மாற்.16:16 |

## ஆசிரியர் கடிதம்...





*அன்பான வாசகர்களுக்கு இயேசுவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.*

*மேது மாத இதழை உங்களுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் கொடுத்து கிறிஸ்துவின் வசனம் தமிழகமெங்கும் சென்றடைய உதவிடுங்கள்.*

*'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை விருப்பமுடையவர்கள் மேலும் இவ்விதழைப்பெற்றிராத 100 நபர்களின் முகவரியை அனுப்பி ஒரு அழகிய முழு வேதாகமத்தை பரிசாக பெற்றுக்கொள்ளுங்கள்.*

*உங்களுக்காக ஜெபிக்கிறோம். - ஆசிரியர்*




**வேதவாக்கியங்களின்படி**
**கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு**

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

பாடம் 26

## உதவிக்காரருடைய தகுதிகள் மற்றும் பணிகள்

### வரைகுறிப்பு

1. அவர்களுடைய நிலை
2. அவர்களுடைய பணி
3. அவர்களுடைய தகுதிகள்

### உரையாடல்

**1. அவர்களுடைய நிலை:**

புதிய ஏற்பாட்டு சபைகளில் இருந்த மற்றொரு அலுவலர் உதவிக்காரர் ஆவார். மூப்பருக்கான தகுதிகளை குறிப்பிட்ட பின்பு வேதாகமம் உதவிக்காரருக்கான அத்தியாவசிய தேவைகளையும் அளிக்கிறது (1 தீமோ. 3:8-13). வசனம் 10 "இவர்கள் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம்" என்று சொல்லுகிறது. அந்த சமயத்தில் உதவிக்காரர்கள் கர்த்தருடைய சபையில் அலுவலர்களாக இருந்தார்கள். பிலி.1:1ல் அப்.பவுல் பிலிப்பி பட்டணத்திலிருந்த பரிசுத்தவான்கள் (அல்லது அங்கத்தினர்கள்) அனைவருக்கும் அதனோடேகூட "கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறார். உதவிக்காரர்கள் மூப்பர்களோடே (அல்லது கண்காணிகளோடு) கூட அலுவலர்களாக பணியாற்றினார்கள். பிராந்திய சபையை வழிநடத்துகிறதில் பணியாற்றினார்கள் என்பதை இது வெளிப்படுத்துகிறது. இவ்வசனங்களிலிருந்து உதவிக்காரருடைய பணி என்பது பிராந்திய சபையில் மற்றொரு அலுவல் என்பதையும், இது மூப்பருடைய பணியிலிருந்து ஒருவித்தியாசமான பணி என்பதையும் நாம் அறிந்துகொள்கிறோம். அப். 6:1-6 வசனங்களில், தேவையுள்ள சபை அங்கத்தினர்களுக்கு பந்திவிசாரிப்பு மற்றும் உதவி செய்வதில் சிரத்தை எடுத்துக்கொள்ளும்படியாக எருசலேம் சபையிலிருந்து மனுஷர்கள் தெரிந்துகொள்ளப்பட்டதை நாம் அறிந்துகொள்கிறோம்.

அவர்களுடைய வேலையானது விதவைகளையும், மற்ற தேவையிலுள்ள அங்கத்தினர்களையும் "அன்றாடக விசாரணை" செய்வதாக இருந்தது (அப். 6:1). தங்களுடைய ஸ்தானத்தில், "பந்தி விசாரணை" செய்யும்படியாக யாரோ ஒருவர் அவர்களுக்கு தேவையாயிருந்தது. இந்த "விசாரணை" மற்றும் "வேலை" என்ற வார்த்தைகளுக்கான கிரேக்கபதம் ஒன்றாகவே இருக்கிறது. அந்த பதத்தில் இருந்துதான், "உதவிக்காரர்" என்ற வார்த்தையும் வருகிறது. முதல் பிராந்திய சபையில் ஏழு மனுஷர்கள் உதவிக்காரராக தெரிந்துகொள்ளப்பட்டார்கள் என்பதை இது நமக்கு சொல்கிறது. உதவிக்காரனுடைய அலுவல் என்பது கர்த்தருடைய சபையின் ஒரு பிராந்திய சபையிலே ஒரு முக்கியமான மற்றும் அத்தியாவசியமான நிலையாக இருக்கிறது.



**2. அவர்களுடைய பணி;**

உதவிக்காரர்கள் ஒருபோதும் சபையின் "கண்காணிகள்" என்று அழைக்கப்படுகிறதில்லை. மூப்பரானவர்கள் கண்காணிகளாயிருந்தார்கள் (1பேதுரு5:1,2). அவர்கள் ஒருபோதும் "ஆளுகை செய்யும்படி" சொல்லப்படுகிறதில்லை. ஆனால் மூப்பர்களோ "நன்றாய் விசாரணை செய்யும்படி" சொல்லப்படுகிறார்கள் (1தீமோ.5:17). உதவிக்காரருடைய பணியானது மூப்பர்களுடைய பணியிலிருந்து ஒரு வித்தியாசமான பணியாக இருக்கிறது. "உதவிக்காரர்" என்பதன் பொருள் "சேவை செய்வதை" குறிப்பிடுகிறபடியால் "உதவிக்காரர்கள்" சபையின் ஊழியர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் காண்கிறோம். அவர்களுடைய பாகம் கண்காணிப்பு அல்ல. ஆனால் ஆவி முதலாவதாக உதவிக்காரர்கள், அப்போஸ்தலருக்கு உதவியாயிருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டார்கள். மூப்பர்கள் ஆவிக்குரிய கண்காணிகளாக இருக்கிறபடியால் இன்றைய நாட்களில் உதவிக்காரர்கள் மூப்பர்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். அவர்களுடைய பணி பிராந்திய சபையின் வேலையையும், ஆராதனையையும் சீராகவும், திறமையாகவும் நடைபெற காரணமாக இருப்பது ஆகும். எங்கெல்லாம் மூப்பர்கள் மட்டும் செய்யக்கூடிய வேலை இருக்கிறதோ அப்படிப்பட்ட மிகமுக்கியமான பணியை அவர்கள் செய்யத்தக்கதாக அங்கெல்லாம் மூப்பர்களை உதவிக்காரர்கள் விடுவிப்பார்கள்.

எருசலேமிலிருந்த இரண்டு உதவிக்காரர்கள் சுவிசேஷகர்களாக பிரசங்கிக்கிற வேலையை செய்தார்கள் (ஸ்தேவான் மற்றும் பிலிப்பு). ஒரு உதவிக்காரனுடைய வேலை என்பது ஒரு பிராந்திய சபையின் மூப்பர்களுக்கு உதவி செய்தாக இருக்கிறபடியால் மற்ற மனுஷர்கள் கையாள இயலும் காரியங்களினால் மூப்பர்கள் அதிகமான பாரஞ்சுமக்கிறவர்களாக ஆகாதபடிக்கு கண்டுகொள்வது என்பது உதவிக்காரனுடைய பணியாக இருக்கிறது. மூப்பர்களுடைய விஷயத்தில் இது உண்மையாக இருந்தபடியால், சபைகளில் எப்பொழுதுமே "ஒரு மூப்பனுக்கு" பதிலாக எப்பொழுதுமே மூப்பர்கள் இருந்தார்கள். எந்த ஒரு உதவிக்காரரும் மற்ற உதவிக்காரர்களைப் பார்க்கிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருக்கவில்லை. அவர்கள் அனைவரும் பிராந்திய சபையின் தாழ்மையுள்ள ஊழியர்களாகவும், மூப்பர்களுக்கு உதவியாளர்களாகவும் இருந்தார்கள்.

**3. அவர்களுடைய தகுதிகள்;**

கர்த்தருடைய சபையின் எல்லா அலுவலர்களும் இயேசு தலையாக மாபெரும் முன்மாதிரியாக இருக்கிறதைப் போன்று இருப்பது அவசியம். முன்மாதிரிகளாக இருக்க வேண்டும். ஆகையால் ஒரு மனுஷன் ஒரு உதவிக்காரனாக நியமிக்கப்படும்படியாக ஒரு முன்மாதிரியாக சில குறிப்பிட்ட தகுதிகளை உடையவராக இருக்க வேண்டியது மிக அவசியம். அவர்கள் "பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருந்த" மனுஷராயிருந்தபடியால் எருசலேமில் மூப்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள் (அப்.6:3). அவர்கள் "விசுவாசமும், வல்லமையும் நிறைந்தவர்களாயிருந்தார்கள் (அப்.6:5,8). அவர்களுடைய "நற்சாட்சி" சபைக்குள்ளேயும், சபைக்கு வெளியேயும் ஒரு நல்ல